රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.04.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2013 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குதல்**

2012 ஆம் ஆண்டு வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் பயிலுனர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு ஒரு வருட பயிற்சியை நிறைவுசெய்துள்ள அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் போது சில பயிலுனர்களுக்கு நியமனம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு பின்னரே நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

02. இந்த உத்தியோகத்தர்கள் நியமனக் கடிதம் கிடைக்கும் வரை தொடர்ச்சியாகப் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததுடன், நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து MN-4 சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படை சம்பள கட்டத்தில் நிறுவப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

03. அதன்படி, நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பின்னிணைப்பு 04 இன் படி அந்த உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளித்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தில் கடமையை பொறுப்பேற்ற திகதியை குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில், உத்தியோகத்தர் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் திகதியை திருத்தம் செய்து சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

உ-ம் :- நியமனத் திகதி : 2013.03.01

கடமையை பொறுப்பேற்ற திகதி : 2013.05.02

பின் இணைப்பு 04இல் கடமையை பொறுப்பேற்ற

திகதிக்கு திருத்தப்பட வேண்டிய விதம் :2013.03.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் 2013.05.02 ஆந் திகதி

04. மேலும், இத்தகைய உத்தியோகத்தர்களின் விடுமுறை அறிக்கைகளைப் அனுப்பும் போது, நன்னடத்தை அறிக்கைகளைத் தயாரிப்பதிலும், வரலாற்றுத் தாளினைத் தயாரிப்பதிலும் பின்வரும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. விடுமுறை அறிக்கையை சமர்ப்பிக்கும் போது, முதல் நியமன திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலம் முடியும் வரையான விடுமுறை விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

உ-ம் :- உத்தியோகத்தரின் நியனத் திகதி 2013.03.01 ஆயின்,

- விடுமுறை அறிக்கை - 2013.03.01 ஆந் திகதி முதல் 2016.02.29 ஆந் திகதி வரை பஞ்சாங்க வருடத்தை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

II. ஆணைக்குழுவின் நடமுறை விதிகளின் பின்னிணைப்பு 05-ன் படி தயாரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது, முதல் நியமன திகதியிலிருந்து வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்யும் திகதி வரையிலான வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உ-ம் :- உத்தியோகத்தரின் நியமனத் திகதி 2013.03.01 ஆயின் மற்றும் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்தது 2016.12.22 ஆந் திகதியாயின்,

மதிப்பாய்வு அறிக்கை :-

- 2013.03.01 – 2014.02.28
- 2014.03.01 – 2015.02.28
- 2015.03.01 – 2016.02.29
- 2016.03.01 – 2016.12.21

III. உத்தியோகத்தரின் வரலாற்றுத் தாளில் நியமனக் கடிதத்தின் படி சேவைக்கு சமூகமளித்தமையை பதிவு செய்யும் போது, மேலே பத்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அவர் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார் என்பதை உறுதிசெய்யும் வகையில் சரியாக குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன், 2014, 2015 ஆண்டுகளுக்கான சம்பள அதிகரிப்புகளை குறிப்பிடும் போது கடமையை பொறுப்பேற்றல் நடைமுறைக்கு வரும் திகதிக்கு ஏற்ப குறிப்பிடப்பட வேண்டும்.

உ-ம் :- வரலாற்றுத் தாள்

- கடமையை பொறுப்பேற்றல் – இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இல............ மற்றும் ................ ஆந் திகதிய கடிதத்திற்கு ஏற்ப 2013.03.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2013.05.02 ஆந் திகதி கடமைக்கு சமூகளித்தல்
- சம்பள அதிகரிப்பு திகதி
    - சம்பள அதிகரிப்பு அனுமதிக்கப்பட்ட திகதிக்கு முன் "2014.03.01ஆந் திகதிக்கு உரித்தான சம்பள அதிகரிப்பை வழங்குதல்" என குறிப்பிடப்பட வேண்டும்.
    - சம்பள அதிகரிப்பு அனுமதிக்கப்பட்ட திகதிக்கு முன் "2015.03.01ஆந் திகதிக்கு உரித்தான சம்பள அதிகரிப்பை வழங்குதல்" என குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பம்./ எஸ். ஆலோக பண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்